**செய்தி வெளியீடு எண்: 077** **நாள்: 30.01.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

சென்னை, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய கூட்ட அரங்கில், **மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில்** அவர்கள் தலைமையில் கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியத்தின் **29**வது கூட்டம் **30.01.2019** அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் காலியாக உள்ள **52** அலுவலக உதவியாளர்களை தேர்வு செய்யும்பொருட்டு தகுதி வாய்ந்தோர் பட்டியலுக்கு வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. **66** இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களை எழுத்து தேர்வு நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் தகுதிவாய்ந்த நபர்களை தேர்வு செய்யவும், **111** கணினி இயக்குபவர் காலிப்பணியிடங்களை எழுத்து தேர்வு நடத்தி காலிப்பணியிட எண்ணிக்கைக்கு ஏற்ப **1:5** என்ற விகிதத்தில் முதல்நிலை (Preliminary) பட்டியல் தயார் செய்யவும், பின்னர் பணிவிதிகளின்படி கணினித்திறன் தேர்வு மற்றும் தட்டச்சு தேர்வு நடத்தி அதன் அடிப்படையில் பணியாளர்களை தேர்வு செய்யவும் வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டது.

**16.05.2011** முதல் **31.12.2018** வரை **8,28,577** கட்டுமானத் தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு மொத்தம் 12.1 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.**462.55** கோடி செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் ஆணையர் முனைவர் **டாக்டர் இரா.நந்தகோபால், இ.ஆ.ப.,** தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் **திரு.ம.பாஸ்கரன்** மற்றும் வாரிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**